श्रीमच्छंकरभगवत्पादविरचिता

श्रीमातृकाक्रमस्तुतिः

ஸ்ரீசங்கரபகவத்பாதர்

திருவாய் மலர்ந்தருளிய

ஸ்ரீ மாத்ருகாக்ரமஸ்துதி:

வாதூல. வே. ராமசந்த்ர சர்மா இயற்றிய

அர்த்தப்ரகாசிகா

என்னும் தமிழ் அநுவாதத்துடன் கூடியது

ஸ்ரீ பக்த ஸமாஜம்

மாம்பலம் :: சென்னை-33.

Scanned by CamScanner

श्रीमात्रे नमः

முன்னுரை

देवतान्तरमन्त्रौघजयश्रीफलभूतया ।
जापकस्तव देव्यन्ते विद्ययामृतमश्नुते ॥

ஓ அன்னையே! மற்ற தேவதைகளுடைய மந்த்ரத்தொகுதிகளை ஜபம் செய்வதாலுண்டாகின்ற நற்பயன்களின் வடிவாயமைந்த உன்னுடைய வித்யையினால், அத்தொழும்பனும் முடிவில் உனது ஸாம்ராஜ்யமாம் அழியா நிலையையும் எய்துகின்றான் அன்றே! என்பது ஆன்றோர் வாக்கு.

ஸ்ரீ சங்கரபகவத்பாதர் அருளிய துதிகள் பல. அவைகளில் ஸ்ரீமாத்ருகா க்ரமஸ்துதி என்பதும் ஒன்று. இத்துதி பலச்ருதியோடு பதினாறு செய்யுட்களைக்கொண்டு விளங்குவது. இவர் பஞ்சதசாக்ஷரீயினுடைய ஒவ்வொரு அக்ஷரத்தையும் ஒவ்வொரு செய்யுளின் துவக்கத்திலே வைத்து அழகிய நடையிலே அமைத்துள்ளார். இவை போன்ற துதிகள் பலவும் ஸ்ரீசங்கரர் புனைந்துள்ளார்.

ஆயினும், இச்சிறு துதி ஹ்ரீங்காரத்தின் பெருமையைப் பெரிதும் போற்றுவது தனிப் பெருமையாகும். ஹ்ரீங்காரமே அன்னையின் வடிவம் என்பதையும் ஆங்காங்கு வலியுறுத்துவதையும் காணலாம். ஹ்ரீங்காரத்தின் பெருமைகளை ஸ்ரீலலிதாத்ரிசதியில் பரக்கக் காணலாம். அதற்கு அருமையானதோர் பாஷ்யத்தையும் இவரே இயற்றியுள்ளார்.

Scanned by CamScanner

ஹ்ரீங்காரபரஸௌக்யதா— என்ற நாமாவிலுள்ள **ஹ்ரீங்காரபரா** – என்ற வாக்யத்திற்கு ஹ்ரீங்கார மந்திரத்தை ஜபம் செய்பவர்கள் எனவும் பொருள் சொல்லுவர். அல்லது, ஹ்ரீங்காரத்தால் இணைக்கப் பெற்ற ஸ்ரீவித்தையை ஜபம் செய்பவர்கள் எனவும் சொல்லலாம். என விளக்கம் கொடுத்து, இத்தகைய ஹ்ரீங்காரத்தை ஜபம் செய்கின்ற தொண்டர்களுக்கு நால்வகையாயுள்ள பரம ஸுகத்தைக் கொடுப்பவள் எனவும், அல்லது ஹ்ரீங்காரம் வ்யஷ்டி வடிவாயமைந்தது. அதன் வாச்யப் பொருளான மும்மூர்த்திகளுக்கும் சிறந்த ஸௌக்யத்தைக் கொடுப்பவள் எனவும் சொல்லுவர். அதாவது ஸாமரஸ்ய வடிவாயமைந்த ஸுகத்தை - அன்னை தன்னிடத்திலே ஒன்றிய தன்மையை-கொடுப்பவள் எனவும் பொருள் விளக்கம் கொடுத்துள்ளார்.

மற்றும், இந்த **ஹ்ரீம்** என்னும் அக்ஷரமானது புவநேச்வரீ பீஜமுமாகும். இந்த ஏகாக்ஷரத்தின் பெருமைகளை ஆங்காங்கு மந்த்ரசாஸ்த்ரங்களில் பரக்கக் காணலாம். இங்கு விளக்குவதும் உசிதமன்று.

இத்துதிக்கு **'கல்யாண வ்ருஷ்டி ஸ்தவம்'** எனவே அச்சாகியுள்ள பிரதிகளில் பெயர் காணப் பெறுகின்றது. இதற்குக் காரணம் நூலின் துவக்கத்திலே 'கல்யாண வ்ருஷ்டிடி:' எனத் துவங்கியிருப்பதேயாகும். கல்யாணம் - மங்களம். வ்ருஷ்டி-பொழிதல். அதாவது மங்கங்களைப்பொழிதல் என்பது அந்த வாக்யத்தினுடைய பொருளாகும், ஆயினும், தொன்மை வாய்ந்த உரையாசிரியர்கள் பலர், **'க்ரமஸ்துதி'** என்ற பெயரைக் கொண்டே இதை மேற்கோளாகக் கொண்டுள்ளனர்.

Scanned by CamScanner

உதாஹரணமாக, ஸௌந்தர்யலஹரியின் உரையாசிரியர்களில் ஒருவரான ஸ்ரீகைவல்யாச்ரமியானவர் தமது ஸௌபாக்யவர்த்தநியில், ததுக்தம் க்ரமஸ்துதௌ, (க்ரமஸ்துதியில் இது சொல்லப் பெற்றுள்ளது) 'ஈசத்வ பாவகலுஷா:' என்ற மூன்றுவது செய்யுளையும், இவ்விதமே, ஸ்ரீசங்கராசார்யேணைவ க்ரமஸ்துதௌ, (ஸ்ரீசங்கராசார்யராலேயே க்ரமஸ்துதியில்), 'ஹ்ரீங்காரமேவ தவ நாம' என்ற ஐந்தாவது செய்யுளையும், ஸ்ரீசங்கராசார்யேணைவ க்ரமஸ்துதௌ, 'லாஸ்யம் யதா' என்ற பதினன்காவது செய்யுளையும் மேற்கோளாகக் கொள்ளுகிறார். இங்கு 'லக்நம் ஸதா' என்ற பாடம் காணப் பெறுகின்றது. அவர் 'லாஸ்யம்' எனவும் பாடம் கொண்டுள்ளார்.

ஸ்ரீ பாஸ்கரராயரர், தமது ஸௌபாக்யபாஸ்கரம் என்னும் ஒப்புயர்வுற்ற உரை நூலில் 'மஹேச்வர மஹாகல்ப மஹாதாண்டவ ஸாக்ஷிணீ' என்ற நாமாவுக்கு உரை வகுக்கும் பொழுது இந்த ஸ்துதியின் பதின்மூன்றுவது செய்யுளை மேற்கோளாகக் கொண்டு, ததுக்தம் பஞ்சதசீஸ்தவே, (பஞ்சதசீஸ்தவத்தில் அது சொல்லப் பெற்றுள்ளது.) எனச் சொல்லுவர். அங்கு 'கல்போப ஸம்ஹரண கல்பித' எனப் பாடம் கொண்டுள்ளார். பதிப்பித்த பிரதிகளில் 'கல்போப ஸம்ஹ்ருதிஷு' என்ற பாடம் காணப் பெறுகின்றது.

ஆகவே, இத்துதியில் பஞ்சதசீமாத்ருகைகளின் முதல் அக்ஷரத்தை வரிசையாக ஒவ்வொரு செய்யுளின் துவக்கத்திலே பொருத்தி அமைத்துள்ள காரணத்தால் 'ஸ்ரீமாத்ருகாக்ரமஸ்துதி' அல்லது 'பஞ்தசீ க்ரமஸ்துதி' என்ரே பெயர் இருப்பதுதான் சாலப்பொருந்தும் எனவும் கருத முடியும்.

Scanned by CamScanner

மற்றும், இந்த ஸ்தவத்திற்கும், தர்மாசார்யர் செய்த அம்பாஸ்தவத்திற்கும் பல ஒற்றுமை கள், யாப்பின் அமைப்பிலும், சொற்களின் நயத்தி லும், பொருள்களின் விளக்கத்திலும், காணப்பெறு கின்றன. அவைகளை இங்கு விஸ்தாரமாக எடுத்து ஒப்புநோக்கி வரைவதும் பொருத்தமன்று. ஆதலால் ரஸிகர்களான தொண்டர்கள் முயற்சிசெய்து சுவை களிலுள்ள ஒற்றுமையையும், நடைகளிலுள்ள அலகையும் ஒப்புநோக்கி அறிந்து கொள்வது நல்லது என தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முடிவாக, இச்சிறு துதியை பாரத நாட்டிலே தோன்றிய பண்புக்கு இலக்கணமாயமைந்துள்ள சகோதர சகோதரிகளும், தாய்மார்களும் பொருள் விளக்கத்தோடு அநுதினமும் அநுஸந்தானம் செய்து, மஹாமாயையாம் அன்னையின் திருவருளுக் குத் தங்களைத் தகுதியுள்ளவர்களாகச் செய்து கொள்ள வேண்டுகிறேன்.

இங்ஙனம்

ஆசிரியன்

Scanned by CamScanner

ஓ

शिवाभ्यां नमः

श्रीमच्छंकरभगवत्पादविरचिता

श्रीमातृकाक्रमस्तुतिः

(कल्याणवृष्टिस्तवः)

कल्याणवृष्टिभिरिवामृतपूरिताभि
लंक्ष्मीस्वयंवरणमङ्गलदीपिकाभिः ।
सेवाभिरम्ब तव पादसरोजमूले
नाकारि किं मनसि भाग्यवतां जनानाम् ॥ १ ॥

கல்யாணவ்ருஷ்டிபிரிவாம்ருத பூரிதாபிர்
லக்ஷ்மீ ஸ்வயம் வரணமங்கள தீபிகாபி:
ஸேவாபிரம்ப தவ பாத ஸரோஜமூலே
நாகாரி கிம் மநஸி பாக்யவதாம் ஜநாநாம் (க)

(ப-ரை) **हे अम्ब** - ஓ அன்னையே! **कल्याण-वृष्टिभिः-इव** - மங்களப் பொழிவுகளினாலே போல, **अमृत-पूरिताभिः** - அமுதங்களினால் நிறைந்துள்ளனவையும், **लक्ष्मी-स्वयंवरण-मङ्गल-दीपिकाभिः** - ஸம்பத்துக்களுடைய ஸ்வயம் வரணத்தினாலுண்டான மங்கள ஒளிகளோடு கூடியவையுமான, **तव** - உன்னுடைய, **पाद-सरोज-मूले** - சேவடி யென்னும் செந்தாமரை மலரின் அடியிலே, **सेवाभिः** - ஸேவைகளோடு கூடிய, **भाग्यवताम्** - மஹா பாக்ய சாலிகளான, **जनानाम्** ஜனங்களுடைய, **मनसि** - மனதில், **किं-न-अकारि** - எதைத்தான் செய்ய முடியாது?

श्रीमच्छंकरभगवत्पादविरचिता:

श्रीमातृकाक्रमस्तुतिः

அன்னாய்! மங்களங்களைப் பொழிபவைகளே போன்ற அமுதங்கள் நிறைந்துள்ளவைகளான சோபைகளைச் செய்கின்ற உன்னுடைய கஞ்சமலர

Scanned by CamScanner

டிகளிலே செய்கின்ற ஸேவைகளினுல், பாக்யசாலி களான தொழும்பர்களுடைய விருப்பங்கள் எவை தான் நிறைவேறுது. எல்லா விருப்பங்களும் நிறை வேறுமன்றே!

உலகைத் தோற்றுவித்த அன்னுய்! கஞ்சமலர் களெனத் திகழுகின்ற உனது சேவடிகளிலே செய் யப் பெற்றவையும், ஸௌபாக்ய மென்னும் அமுதம் நிறைந்துள்ள மழையைப் பொழிபவைகளே போன்றவையும், பரிபூரணமான ஸம்பத்துக்களுக்கு உறைவிடமாம் ஸ்ரீ லக்ஷ்மீதேவியினுடைய ஸ்வயம் வரண ஸமயத்திலே ஒளிருகின்ற மங்கள தீபங்களே போன்றவைகளுமான பூஜை, ஜபம், சிந்தனை இவைக ளென்னும் ஸேவைகளினுல், பாக்யசாலிகளான பக் தர்களுடைய மனதிலே எழுகின்ற விருப்பங்கள் எவைதான் நிறைவேறுது? எல்லா விருப்பங்களும் அத்தொழும்பர்களுக்கு உனது திருவருளால் நிறை வேறுமென்பது உறுதியன்றே! என்பது தாத் பர்யம். (1)

एतावदेव जननि स्पृहणीयमास्ते
त्वद्वन्दने च सलिलस्थगिते च नेत्रे ।
[1]सांनिध्यमुद्यदरुणायुतसोदरस्य
त्वद्विग्रहस्य परया सुधयाप्लुतस्य ॥ २ ॥

ஏதாவதேவ ஜநநி ஸ்ப்ருஹணீயமாஸ்தே
த்வத்வந்தநேஷு ஸலிலஸ்தகிதே ச நேத்ரே.
ஸாம்நித்ய முத்யதருணயுத ஸோதரஸ்ய
த்வத் விக்ரஹஸ்ய பரயா ஸுதயாப்லுதஸ்ய (2)

---

1. "**मद्य तरुणाम्बुज**" மத்ய தருணம்புஜம் என்ற பாட மும் உண்டு. அதற்கு இப்பொழுது மலர்ந்த தாமரை மலர் எனப் பொருளாகும்.

Scanned by CamScanner

हे-जननि-ஓ அன்னையே, **त्वद्-वन्दने-च** உன்னுடைய ப்ரணமத்திலும், **सलिल - स्थगिते** - கண்ணீரால் தடுக்கப்பெற்ற, **नेत्रे च**-கண்களும், **उद्यत्-अरुण-अयुत सोदरस्य** - உதித்தெழுகின்ற பரிதியின் பதினாயிரத்திற்கு ஸோதரத்தன்மை கொண்டதும் **परया**-சிறந்த, **सुधया**-அமுதத்தினால், **आप्लुतस्य**-எங்கும் நனைக்கப் பெற்றதுமான, **त्वत् - विग्रहस्य** - உனது திருமேனியினுடைய, **सांनिध्यं - च** - அருகிலிருக்கும் தன்மையையும்; **एतावत्-एव**-அறுதியிட்ட இந்த இரண்டு நிலைகளையே, **स्पृहणीयम्** - (நான்) விரும்புவதாக, **आस्ते** - இருக்கவேண்டும்.

அன்னாய்! உன்னுடைய சேவடியைப் புகழும் பொழுது என்னையுமறியாது உனது கல்யாண குணங்களிலே ஒன்றிய காரணத்தால் பெருகிவரும் ஆனந்த பாஷ்பமாம் கண்ணீரால் தடுக்கப் பெற்ற கண்களும், உதயகாலத்திலெழுகின்ற பரிதியின் பல கொண்ட சென்னிறத் தன்மைக்கு ஸோதரத்தன்மை பூண்டுள்ள உனது அழகிய திருமேனியினுடைய அருகில் நான் அமர்ந்துள்ள நிலையும் ஆகிய இவ் விரண்டையுமே அறுதியிட்டு நான் விரும்புவதாகும். நான் வேறு ஒன்றும் உன்னைக் கேட்க வில்லை. (2)

ईशत्वभावकलुषाः कति नाम सन्ति
ब्रह्मादयः प्रतिभवं प्रलयाभिभूताः ।
एकः स एव जननि स्थिरसिद्धिरास्ते[1]
यः पादयोस्तव सकृत् प्रणतिं करोति ॥ ३ ॥

ஈசத்வபாவகலுஷாः கதி நாம ஸந்தி
ப்ரஹ்மாதயः ப்ரதிபவம் ப்ரளயாபி பூதாः.

---

1. **स्थिरसंस्थया**—ஸ்திர ஸம்ஸ்தயா - என்ற பாடமும் காணப் பெறுகின்றது, அப்பொழுது நிலைத்த பெருமையோடு எனப் பொருள் கொள்ள வேண்டும்.

Scanned by CamScanner

एकः स एव जगति स्तिरसित्तराஸ்தே
यः पादयो स्तव सकृத் ப்ரணதிம் கரோதி.

ईशत्व - भाव - कलुषाः - பெயரளவிலே தலைமைத் தன்மை கொண்டு கலங்கியவர்களான, **ब्रह्मादयः**-நான் முகன் முதலியவர்கள், **कति** - எவ்வளவு, **नाम** - பெயர் கள், **सन्ति** - இருக்கின்றனர். **प्रति - भवम्** - ஒவ்வொரு படைப்பிலும், **प्रलय-अभि-भूताः**-ப்ரளயத்தில் விழுங்கப் பெற்றவர்களாக இருக்கின்றனர். **यः** - எவன், **तव** - உன்னுடைய, **पादयोः** - திருவடிகளில், **सकृत्** - ஒரு தடவையாவது, **प्रणतिम्** - நமஸ்காரத்தை, **करोति**-செய் கின்றானே, **सः** - அவன், **एकः-एव** - ஒருவனே, **स्थिर-सिद्धिः** - உறுதியாயுள்ள நிறைவெய்தியவனாக, **आस्ते** - இருக்கின்றான் அன்றே!

அன்னாய்! ஈச்வரத்தன்மையடைந்த அஹங் காரத்தால் அயன் முதலிய தேவர்களைப் போல் பெயரளவில் கணக்கற்றவர் பலர் இருக்கின்றனர். ஆயினும், அவர்கள் யாவரும் உலகம் தோன்றும் பொழுது அதனோடே தோன்றுகின்றனர். பின்னர் ஊழிக்காலத்திலே உருவழிந்து ஒடுங்கிவிடுகின் றனர். ஆனால் உனது சேவடியை மனத்தேயிருத்தி, இரவும் பகலும் இடை விடாது நினைந்துருகி, ஒரு தடவையாவது உனது கஞ்சமலராம் அழியாத் திருவடியை அடைக்கலமடைந்தால் அவன் நிலைத்த பேரின் நிலையைப் பெறுகின்றான் அன்றே!

अभिभूता :—அபிபூதா :.... என்ற சொல் அரச னாலோ அல்லது பகைவர்களினாலோ கர்வத்தை யிழந்தவன் என்ற பொருளில் வந்துள்ளது, ஆயினும் இங்கு ஸந்தர்பத்தைத் தழுவி முன்னுள்ள ப்ரளய என்ற சொல்லுக்கிணங்க ஊழியிலே அவர்களோடு அவர்களுடைய தற்பெருமையும் மறைந்து விடுகின் றது என்பது கருத்து.

Scanned by CamScanner

लब्ध्वा सकृत् त्रिपुरसुन्दरि तावकीनं
कारुण्यकंदलितकान्तिभरं कटाक्षम् ।
कंदर्पभावसुभगाः खलु भक्तिभाजः
संमोहयन्ति तरुणीर्भुवनत्रयेऽपि ॥ ४ ॥

லப்த்வா ஸக்ருத் த்ரிபுரஸுந்தரி தாவகீநம்
காருண்ய கந்தலிதகாந்திபரம் கடாக்ஷம்.
கந்தர்பபாவஸுபகா: கலு பக்திபாஜ:
ஸம்மோஹயந்தி தருணீர் புவநத்ரயேऽபி. (4)

हे - त्रिपुसुन्दरि - ஓ அன்னையே! **कारुण्य-कंदलित-कान्ति - भरम्** - கருணையென்னும் ரஸத்தால் வளர்ச்சி பெற்ற ஒளியுடன் நிறைந்த, **तावकीनम्** - உனது திரு மேனியினுடைய, **कटाक्षम्** - கடைக்கணிப்பை, **सकृत्** - ஒரு தடவையாவது, **लब्ध्वा** - அடைந்து, **भक्ति-भाजः** - பக்தியைக் கைவரப் பெற்ற தொண்டர்கள், **कंदर्प - भाव - सुभगाः** - காம தேவனைப்போல ஸௌபாக்யங் கள் நிறையப் பெற்றவர்களாக, **भुवनत्रये - अपि** - மூவு லகிலும், **तरुणीः** - யுவதிகளை, **संमोहयन्ति** - நன்கு மோ ஹமடையச் செய்கின்றனர்.

அன்றுய்! கருணைநிறைந்து ஒளியுடன் நிறைந்து விளங்குகின்ற உனது திருமுகத்தில் இலங்கும் கடைக் கணிப்பை ஒரு தடவையாவது அடைந்துள்ள உன்னை வணங்கும் தொண்டர்கள், காமதேவனைப் போன்ற வனப்பு, ஸௌபாக்யங்கள் இவைகள் நிறைந்து, மூவுலகிலுமுள்ள மங்கையர்களையும் மோஹமடையச் செய்யும் பெருமையை யெய்துவ ரன்றே.

Scanned by CamScanner

ह्रींकारमेव तव नाम गृणन्ति वेदाः
मातस्त्रिकोणनिलये त्रिपुरे त्रिणेत्रे ।
त्वत्संस्मृतौ यमभटादिभयं विहाय
दीव्यन्ति नन्दनवने सह लोकपालैः ॥ ५ ॥

ஹ்ரீங்காரமேவ தவநாம க்ருணந்தி வேதா:
மாதஸ்த்ரிகோணநிலயே த்ரிபுரே த்ரிணேத்ரே
த்வத் ஸம்ஸ்ம்ருதௌ யமபடாதிபயம் விஹாய
தீவ்யந்தி நந்தநவநே ஸஹ லோகபாலை: (5)

त्रिकोणनिलये - முக்கோணத்தில் நிலைத்துள்ள வளே ! **त्रिपुरे** - மூப்புரங்களின் வடிவாய்த் திகழ்ப வளே ! **त्रिनेत्रे** - முக்கண் கொண்டவளே ! **हे-मातः** - ஓ அன்னையே! **तव** - உன்னுடைய, **नाम** - பெயரை **वेदाः** - வேதங்கள், **ह्रींकारम् - एव** - ஹ்ரீங்காரத்தைக், கொண்டே, **गृणन्ति** - துதிக்கின்றன. **त्वत्-संस्मृतौ** - உன்னுடைய சிந்தனையில், **यम-भट-आदि-भयम्** - யமதூதர்கள் முதலியவர்களுடைய பயத்தை, **विहाय**-விட்டு, **लोकपालैः** - லோகபாலர்களோடு, **सह** - கூட, **नन्दनवने** - நந்தன வனத்தில், **दीव्यन्ति** - விளையாடுகின்றனர்.

முக்கோணத்தில் நிலைத்துள்ளவளும், மூன்று புரங்களைக் கொண்டவளும், மூன்று கண்களைக் கொண்டவளுமான ஓ அன்னையே! பீஜாக்ஷரங்களில் தலைசிறந்துள்ள ஹ்ரீங்காரத்தையே உன்னுடைய திருநாமமென மறைகள் முழங்குகின்றன. இப்பெருமை வாய்ந்த, திருநாமத்தை நன்கு சிந்தனை செய்கின்ற தொழும்பர்கள், யமதூதர்களுடைய துன்பத்திலிருந்து விடுதலை யடைந்து ஸ்வர்க்கத்திலுள்

Scanned by CamScanner

கந்தருவநமாம் பூங்காவிலே, புரந்தரன் முதலிய வான வர்களோடு திளைத்திருக்கின்றனர்.

இவ்விடத்தில், முக்கோணம்-த்ரிகோணம்-என் பது பிந்துவடிவாயமைந்த சிவசக்திகளுடைய ஸாமரஸ்யத்திலுள்ள சக்தியினுடைய ஸத்-சித் ஆநந்த வடிவாயமைந்த ஒரு தோற்றமேயாகும். இக்காரணம் கொண்டு இவ்விடத்தில் த்ரிகோண நிலையே! என வெளிவேற்றுமை-ஸம்போதநம்-உப யோகித்துள்ளது. மற்றும் ஸ்ரீத்ரிபுராதேவியினு டைய வாசகமாயமைந்துள்ளது ஹ்ரீங்காரம் என மறைகளும், மந்த்ரசாஸ்த்ரதத்துவத்தைக் கசடறக் கற்ற முதியோர்களும் ஒருமுகமாகச் சொல்லுவதை யும் நாம் காண்கின்றோம்.

ஆகவே, ஸ்ரீதேவிக்கும், பீஜத்திற்கும் வாச்ய வாசகத் தன்மையானது எவ்விதமெனில், த்ரிபுரா என்ற சொல்லிலும், ஸ்தூலம், ஸூக்ஷமம், காரணம் என்ற சரீரத்திற்குத் தலைவியாயிருப்பது போலவே, ஹ்ரீங்காரம் என்ற சொல்லிலுள்ள வ்யஷ்டி, ஸமஷ்டி என்ற உபாதிகளும் மூன்று சரீரங்களிலும் பரவி யிருப்பதாகும். கூடாக்ஷரமான ஹ்ரீங்காரத்தினு டைய அவயவமென்பது—ஹ்-ர-ஈ-ம் என்ற நான்கு அக்ஷரங்களாகும்.

இவைகளில், ஸ்தூலம், ஸூக்ஷமம், காரணம் என்ற மூன்று சரீரங்களையும் அவைகளுடைய இணைப் பையும் சுட்டிக்காட்டுகின்ற ஆகாசபீஜமான ஹகா ரம், ஆகாசம் முதலிய ஐம்பெரும் பூதங்களின் வடி வான தூல சரீரத்தையும், அக்நிபீஜமாகிய ரகாரம், தேஜோவடிவாயமைந்த ஞாநேந்திரியங்களுடைய ஸமஷ்டியாகிய ஸூக்ஷம சரீரத்தையும், காமபீஜ மாகிய ஈகாரமானது, அவித்யாநந்த வடிவான காரண சரீரத்தையும், பிந்துவடிவான மகாரமானது,

Scanned by CamScanner

முன்பு சொல்லிய மூன்று பீஜங்களையும் ஒன்றாக இணைத்து அந்தர்யாமியாயிருந்து கொண்டு ஸ்தூலமாயுமிருப்பதாகும்.

இவ்வாறு, இச்செய்யுளில் த்ரிபுராதேவிக்கும், ஹ்ரீங்காரத்திற்கும், வாச்ய வாசகத் தன்மையானது* பலபடியாக உணர்த்தப் பெற்றது. இதைக் காட்டிலும் இன்னும் விஸ்தாரமாக எடுத்துக் காட்டலாம். துதி வடிவாயமைந்த இச்சிறு நூல் பெருகிவிடும். ஆதலால் வாசகர்கள் தத்தமக்குரிய அறிவின் வளர்ச்சிக்குத் தக்க முறையிலே பொருளுணர்ந்து கொள்ளுவார்களாக. விரிவான மந்த்ர விளக்கங்களை யறிய விரும்புகின்றவர்கள் எமது ஸ்ரீவித்யாமந்த்ர விளக்கம் என்ற நூலில் காணலாம். (5)

हन्तुः पुरामधिगलं परिपीयमानः
क्रूरः कथं न भविता गरलस्य वेगः ।
नाश्वासनाय यदि मातरिदं तवार्धं
देहस्य शश्वदमृताप्लुतशीतलस्य ॥ ६ ॥

ஹந்துः புராமதிகலம் பரிபீயமாநः
க்ரூரः கதம் ந பவிதா கரலஸ்ய வேகः.
நாச்வாஸநாய யதி மாதரிதம் தவார்தம்
தேஹஸ்ய சச்வதம்ருதாப்லுதசீதலஸ்ய (6)

हे मातः - ஓ அன்னையே! **पुराम्** - புரங்களுடைய, **हन्तुः** - பகைவனான பரமேச்வரனுடைய, **अधि-गलम्** - கழுத்து வரையில், **परि-पीयमानः** - பருகப்பெற்ற,

---

* ஒரு வஸ்துவைக் குறிக்கும் சொல்லுக்கு இலக்காயிருப்பது வாச்யம் எனவும், அச்சொல்லை விவரிப்பது வாசகம் எனவும் சொல்லுவர்.

गरलस्य - விஷத்தினுடைய, **वेगः** - வேகமானது, **तव** - உன்னுடைய, **शश्वत्** - அடிக்கடி, **अमृत** - आप्लुत-शीत - **लस्य** - அமுதத்தினால் நனைக்கப் பெற்ற காரணத்தால் தண்மையுற்ற, **देहस्य** - சரீரத்தினுடைய, **इदम्** - இந்த, **अर्धम्** - பகுதியானது, **आश्वासनाय** - தேறுதலின் பொருட்டு, **न - यदि** - இல்லாது போனால், **क्रूरः** - கொடியதாக, **कथम्**-எவ்விதம், **न-भविता** - இருக்க வில்லையோ.

அன்னாய்! பரமசிவனுடைய கழுத்திலே தங்கியுள்ள கொடியதான காலகூட விஷத்தின் வேகமானது, தண்மை பொருந்திய அமுதப் பெருக்கால் அடிக்கடி நனைந்து கொண்டிருக்கின்ற உன்னுடைய திருமேனி ஒரு பகுதியாயமைந்த காரணத்தாலன்றே அவனால் பொறுத்துக்கொள்ள முடிந்தது. உன்னுடைய தொடர்பு இன்றேல் அவனால் அதை ஏற்றுக் கொள்ளவும் முடியாதன்றே!

மிகவும் கொடியதான ஹாலாஹலம் என்னும் விஷத்தைச் சரீரம் முழுவதும் பரவவொட்டாது, மூப்புரம் கொண்ட பரமசிவனுடைய கழுத்திலே நிலைக்கச் செய்த பெருமையும் அன்னையைச் சார்ந்தது என்பது கருத்து. அதற்குக் காரணமும், தண்மை பொருந்திய அமுதப் பெருக்கால் அடிக்கடி முற்றும் நனைந்து கொண்டிருக்கின்ற திவ்ய மங்களவிக்ரஹமாம் உனது திருமேனி ஒரு பகுதியாயமைந்துள்ள பெருமையுமாகும்.

மற்றும், நீ ஒரு பகுதியாக அவனோடு இணைந்துள்ள காரணத்தால் அர்த்தநாரீ எனவும், விஷத்தைக் கழுத்திலே நிலைக்கச் செய்த காரணத்தால் நீலகண்டன் எனவும் வழக்கு உண்டாகியதன்றே!

Scanned by CamScanner

सर्वज्ञतां सदसि वाक्पटुतां प्रसूते
देवि त्वदङ्घ्रिसरसीरुहयोः प्रणामः ।
किं च स्फुरन् मकुटमुज्ज्वलमातपत्रं
द्वे चामरे च महती वसुधां ददाति ॥ ७ ॥

ஸர்வஜ்ஞதாம் ஸதஸி வாக் படுதாம் ப்ரஸூதே
தேவி த்வதங்க்ரிஸரஸீருஹயோ: ப்ரணாம:
கிஞ்ச ஸ்புரந் மகுடமுஜ்ஜ்வலமாதபத்ரம்
த்வே சாமரே ச மஹதீம் வஸுதாம் ததாதி (7)

हे-देवि - ஓ அன்னையே! **त्वत्-अङ्घ्रि-सरसीरुहयोः** - உன்னுடைய சேவடிகளென்னும் தாமரைமலர்களில், **प्रणामः** - நமஸ்காரமானது, **सर्वज्ञताम्** - எல்லாமுணர்ந்த தன்மையையும், **सदसि** - சபையில், **वाक् पटुताम्** - வாக்கின் திறமையையும், **प्रसूते** - உண்டுபண்ணுகின்றது. **किं च** - மற்றும், **स्फुरत् - मकुटम्** - ஒளிருகின்ற மகுடத்தையும், **उज्ज्वलम्** - காந்தியோடுதுலங்கும், **आतपत्रम्** - வெண்பட்டுக் குடையையும், **द्वे** - இரண்டு, **चामरे** - வெண் சாமரங்களையும், **महतीम्** - விஸ்தாரமான, **वसुधाम्** - பூமியையும், **ददाति**- கொடுப்பதன்றே!

அன்னாய்! உன்னுடைய கஞ்சமலரடிகளிலே செய்யும் நமஸ்காரமானது எல்லாவற்றையும் உணர்ந்துள்ள நிலையையும், வித்வத்ஸபையில் வாக்கின் திறமையையும் கொடுப்பதன்றே! மற்றும் ஒளிமிகுந்து விளங்குகின்ற வெண்பட்டுக் குடையையும், வெண்சாமரங்களையும் விஸ்தாரமான வஸுமதியையும் கொடுப்பதன்றே!

Scanned by CamScanner

அதாவது ஒரு அரசனுக்குரிய இலக்கணகங்கள் அமைந்த பிருதுகளோடு அப்பதவியை யளிக்கும் திறனைப் பெற்றுள்ளது அன்னையின் திருவடிகள் என்பது ஸாரம். (7)

कल्पद्रुमैरभिमतप्रतिपादनेषु
कारुण्यवारिधिरम्ब भवत्कटाक्षैः ।
आलोकय त्रिपुरसुन्दरि मामनाथं
त्वय्येव भक्तिभरितं बत बद्धतृष्णम् ॥ ८ ॥

கல்பத்ருமை ரபிமத ப்ரதிபாதநேஷு
காருண்யவாரிதிரம்ப பவத்கடாக்ஷை:
ஆலோகய த்ரிபுரஸுந்தரி மாமநாதம்
த்வய்யேவ பக்திபரிதம் பத பத்தத்ருஷ்ணம் (8)

हे-त्रिपुरसुन्दरि - ஓ த்ரிபுரஸுந்தரி! **अम्ब**-அன்னையே! **त्वम्** - நீ, **अभिमत-प्रतिपादनेषु** - விரும்பிய வற்றைக் கொடுப்பதில், **कल्पद्रुमैः** - கற்பகத் தருக்களாகவும், **कारुण्य-वारिधिभिः** - கருணைக் கடலாகவுமிருக்கின்ற, **भवत् कटाक्षैः** - உன்னுடைய கடைக்கணிப்புக்களினால், **त्वयि - एव** - உன்னிடத்திலேயே, **भक्ति - भरितम्** - பக்தியினால் நிறைந்த உள்ளமுள்ளவனும், **त्वयि** - உன்னிடத்தில், **बद्ध - तृष्णम्** - கட்டுண்ட வேட்கை கொண்டவனும், **अनाथम्** - உதவியற்றவனுமான, **माम्** - என்னை, **आलोकय** - பார்ப்பாயாக, **बत** - (உன்னை) அழைக்கிறேன்.

அன்னாய்! த்ரிபுஸுந்தரி! வரையாது கொடுத்து அருள் புரிவதில் இணையற்று விளங்குகின்ற கற்பகத்தருக்களுக்கு நிகராகவும், கருணை நிரம்பிய

Scanned by CamScanner

கடலாகவும் விளங்குகின்ற உன்னுடைய திருமுகத்திலே யிலங்கும் திருநோக்குகள், உதவியற்றவனும், உன்னிடத்திலே கொண்ட பக்தியின் எழுச்சியினால் கட்டுண்டு ஆவலுடன் உன்னையே தஞ்சமடைந்தவனும் ஆன என்னிடத்திலே ஒரு சிறிதளவு கிருபை திருக்க வேண்டுமென உன்னை அழைக்கிறேன், அருள்வாயாக.

बत - பத என்னும் சொல் அழைத்தல் என்னும் பொருளிலும் வழங்கப்பெறும். இதற்குப்ரமாணமும், **बत-पत** - என்னும் சொல் அவ்யயம். **'वदानुकम्यासंतोष-विस्मयामन्त्रणे बत'** — துக்கம், இரக்கம், மகிழ்ச்சி, வியப்பு, அழைத்தல் இவைகளை 'பத' என்னும் சொல் சுட்டி நிற்கும் என்ற **அமரகோசமாகும்.** (8)

हन्तेतरेष्वपि मनांसि निधाय चान्य-
भक्तीर्वहन्ति किल पामरदैवतेषु ।
त्वामेव देवि मनसा समनुस्मरामि
त्वामेव नौमि शरणं जननि त्वमेव ॥ ९ ॥

ஹந்தேதரேஷ்வபி மநஸாம்ஸி நிதாய சாந்ய-
பக்தீர் வஹந்தி கில பாமரதைவதேஷு.
த்வாமேவ தேவி மநஸா ஸமநுஸ்மராமி
த்வாமேவ நௌமி சரணம் ஜநநி த்வமேவ (9)

हे जननि - ஓ அன்னையே! **इतरेषु**-மற்றவர்களான, **पामर-दैवतेषु** - கீழ்த்தரமான தைவதங்களில், **मनांसि** - மனப் போக்குகளை, **निधाय - अपि** - வைத்திருந்த பொழுதிலும், **अन्य - भक्तीः** - வேறு தேவதைகளினிடத்தில் செலுத்தும் பக்திகளை, **वहन्ति-किल** - சுமக்

கின்றீர்கள் அல்லவா ? **हन्त** - கஷ்டம், **(अहम्** - நான்) **त्वाम् एव** - உன்னையே, **हे-देवि** - ஓ அன்னையே ! **मनसा**- மனதால், **समनुस्मरामि**-கன்கு சிந்தனை செய்கிறேன். **त्वाम्-एव** - உன்னையே, **नौमि** - நமஸ்காரம் செய்கிறேன். **(मम** - எனக்கு) **त्वम्-एव** - நீயே, **शरणम्** - எனக்கு அடைக்கலம்.

அன்னாய் ! மக்கள் பெரும்பாலும் உன்னைவிட்டு பாமர தேவதைகளினிடத்தில் மனதைப் பறி கொடுத்து இரவும் பகலும் பக்தியோடு கூடத் தொழுதும் வருகின்றனர். ஆஹா என்ன கஷ்டம் (நீயோ அவர்களிடத்திலும் கருணை கொண்டு விளங்குகின்றாய்) நானோ, என்னையே உன்னிடம் ஒப்படைத்து, எம்பொழுதும் மனதால் நினைப்பதும், வாக்கால் போற்றுவதும், மெய்யால் வணங்குவதுமாக இருக்கின்றேன். ஆதலின் அன்னாய் ! என்னை ஆட்கொண்டு என்மீது கருணையைப் பொழிவாயாக.

இவ்விடத்தில் பாமர தைவதமென்றது. தாமஸ குணமுள்ள தைவதங்கள். அதாவது கருப்பன், காட்டேரி, முனியாண்டி முதலியவைகள். (9)

लक्ष्येषु सत्स्वपि कटाक्षनिरीक्षकाना-
मालोकय त्रिपुरसुन्दरि मां कदाचित् ।
नूनं मया तु सदृशः करुणैकपात्रं
जातो जनिष्यति जनो न च जायते च ॥ १० ॥

லக்ஷ்யேஷு ஸத்ஸ்வபி கடாக்ஷநிரீக்ஷகாநா-
மாலோகய த்ரிபுரஸுந்தரி மாம் கதாசித்.
நூநம் மயா து ஸத்ருச: கருணைகபாத்ரம்
ஜாதோ ஜநிஷ்யதி ஜநோ ந ச ஜாயதே ச (10)

Scanned by CamScanner

हे त्रिपुरसुन्दरि - ஓ அன்னாய்! (**तव** உன்னுடைய) **कटाक्ष निरीक्षकाणाम्**-கடைக்கணிப்புக்களுடைய, **लक्ष्येषु**-இலக்குகள், **सत्सु अपि** - இருந்த பொழுதிலும், **कदाचित्** - ஒரு ஸமயமாவது, **माम् अपि** - என்னையும், **आलोकय** - பார்ப்பாயாக, **मया** - என்னைப்போல், **सदृशः**- ஸமானமான, **जनः तु** - ஜனமோவெனில், **करुण एक पात्रम्** - கருணைக்கு முக்யமான பாத்திரமாக, **न जातः** - உண்டாக வில்லை, **न-जनिष्यति-च** - உண்டாகப் போவதுமில்லை, **न जायते**-இப்பொழுது கூட தோன்றவில்லை, **नूनम्** - உறுதி.

ஓ அன்னையே! உன்னுடைய கருணை ததும்பும் கடைக்கணிப்பிற்கு இலக்கானவர்கள் கணக்கிலடங்காதவர்கள். ஆயினும், தொழும்பனாகிய என்னையும் உனது திருநோக்கால் பார்த்து அருளவேண்டும். ஏனெனில், என்னைப்போல் உனது திருவடியைத் தஞ்சம் புகுந்து இடைவிடாது அவர்கள் தொழுவரோ என்பது ஐயமே. ஆதலின் உன்னுடைய கருணைக்குத் தகுதியுள்ளவன் நானொருவனே. என்னைப்போல முக்காலத்திலும் ஒருவனும் உண்டாகப் போவதில்லை இது உறுதி. ஆதலின் இக்காரணம் கருதியே உனது கருணையை உரிமையோடு வேண்டுகிறேன்.

இவ்விடத்தில், தொண்டன் அன்னையினிடம் அசைக்கமுடியாத தனது பக்தியின் பெருமிதத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறான் என்பதும் இச்செய்யுளின் ஸாரமாகும். (11)

ह्रीं ह्रीमिति प्रतिदिनं जपतां तवाख्यां
किं नाम दुर्लभमिह त्रिपुराधिवासे।

Scanned by CamScanner

मालाकिरीटमदवारणमाननीयां-
स्तान् सेवते वसुमती स्वयमेव लक्ष्मीः ॥ ११ ॥

ஹ்ரீம் ஹ்ரீமிதி ப்ரதிதிநம் ஜபதாம் தவாக்யாம்
கிம் நாம துர்லபமிஹ த்ரிபுராதிவாஸே.
மாலாகிரீட மதவாரண மாநநீயாம்-
ஸ்தாந் ஸேவதே வஸுமதீ ஸ்வயமேவ லக்ஷ்மீ:

हे त्रिपुराधिवासे - மூப்புரங்களிலும் நிலைத்துள்ள ஓ அன்னையே! **प्रति-दिनम्**-தினந்தோறும், **तव**-உன்னுடைய, **आख्याम्** - திருநாமத்தை, **ह्रीं ह्रीम् इति** - ஹ்ரீம் ஹ்ரீம் என்று, **जपताम्**-ஜபம் செய்கின்றவர்களுக்கு, **इह** - இவ்வுலகில், **दुर्लभम्** - கிடைக்கத்தகாதது, **किं नाम**-என்ன இருக்கிறது. (ஒன்று மில்லை) **माला-किरीट-मद-वारण-माननीयाम्** - மாலைகள், மகுடங்கள், மதயானைகள் என்ற இவைகளைக் கொண்டு மரியாதை செய்யப்பெருகின்றவர்களான, **तान्** - அந்த உபாஸகர்களை, **वसुमती** - பூமிதேவியும், **लक्ष्मीः** - லக்ஷ்மீதேவியும், **स्वयम् एव**-தானுகவே, **सेवते** - (முறையே) ஸேவிக்கின்றனர்.

மூப்புரங்களிலும் நிலைத்துள்ள ஓ அன்னையே! ஹ்ரீம் ஹ்ரீம் என்ற உன்னுடைய திருநாமத்தை மிக்க ஆர்வத்துடன் எப்பொழுதும் ஜபம் செய்கின்றவர்களுக்குக் கிடைக்கத்தகாதது இவ்வுலகில் ஒன்றுமில்லை யன்றே! மாலைகளாலும், மதவாரணங்களாலும், கிரீடங்களாலும் மரியாதை செய்யப் பெற்றவர்களாகவும் அவர்கள் விளங்குவதோடு, பூதேவியும், ஸ்ரீதேவியும் வலுவில் வந்து ஸேவித்த வண்ணமிருந்து வருவார்களன்றே!

Scanned by CamScanner

பூமிதேவியைச் சொன்னது நவநிதிகளையும் அவள் கொடுக்கவல்லவள் என்பதைக் குறிக்கும். ஸ்ரீதேவியைச் சொன்னது தனம், தான்யம், பசு, முதலியவைகளைக் கொடுக்க வல்லவள் என்பதைக் குறிக்கும். (11)

संपत्कराणि सकलेन्द्रियनन्दनानि
साम्राज्यदाननिरतानि सरोरुहाक्षि ।
त्वद्वन्दनानि दुरिताहरणोद्यतानि
मामेव मातरनिशं कलयन्तु नान्यम् ॥ १२ ॥

ஸம்பத்கராணி ஸகலேந்த்ரியநந்தநாநி
ஸாம்ராஜ்யதாநநிரதாநி ஸரோருஹாக்ஷி
த்வத்வந்தநாநி துரிதாஹரணோத்யதாநி
மாமேவ மாதரநிசம் கலயந்து நான்யம். (12)

हे सरोरुहाक्षि - செந்தாமரை போன்ற நீண்ட கண்களுடைய அன்னையே! **संपत्कराणि** - ஸம்பத்துக்களைக் கொடுப்பவையும், **सकल-इन्द्रिय-नन्दनानि** - எல்லா இந்த்ரியங்களுக்கும் மகிழ்ச்சியை விளைவிப்பவையும், **साम्राज्यदान - निरतानि** - சக்ரவர்த்தி பதவியை யளிப்பதில் தொடர்புள்ளவையும், **दुरित-आहरण-उद्यतानि** - பாபங்களையகற்றுவதில் முயற்சியுள்ளவையுமான, **त्वद्-वन्दनानि** - உனக்கு (செய்யும்) நமஸ்காரங்கள், **हे मातः** - ஓ அன்னையே! **अनिशम्** - எப்பொழுதும், **माम्** - (தொழும்பனாகிய) என்னை, **अन्यम्** - வேறொருவனாக, **न - कलयन्तु** । (தாங்கள்) நினைக்காதிருக்க வேண்டுகிறேன்.

தாமரை மலரின் இதழ்களை போன்று செவ்வரி பரந்த அழகிய நீண்ட கண்களையுடைய அன்னை

அளவற்ற ஐச்வர்யங்களைக் கொடுப்பவைகளும் எல்லாப் பொறிகளுக்கும் இன்பமளிப்பவையும், பெருகிய ஸாம்ராஜ்யத்தைக் கொடுப்பவையும், பாபங்களையகற்றுவதில் எப்பொழுதும் முனைந்துள்ளவையுமான உனது திருவடித் தாமரைகளில் செய்கின்ற நமஸ்காரங்கள் யாவும், எப்பொழுதும் என்னிடத்தில் நிலைத்திருந்துகொண்டு வேறு ஒருவருக்கும் கிட்டாது இருக்குமளவு என்னிடத்திலேயே தொடர்புள்ளவையாக இருக்க அருள் புரிவாயாக. (12)

कल्पोपसंहृतिषु कल्पिततान्डवस्य
देवस्य खण्डपरशोः परभैरवस्य ।
पाशाङ्कुशैक्षवशरासनपुष्पबाणा
सा साक्षिणी विजयते तव मूर्तिरेका ॥ १३ ॥

கல்போபஸம் ஹ்ருதிஷு கல்பிததாண்டவஸ்ய
தேவஸ்ய கண்டபரசோ: பரபைரவஸ்ய
பாசாங்குசைக்ஷவசராஸநபுஷ்பபாணா
ஸா ஸாக்ஷிணீ விஜயதே தவ மூர்திரேகா. (13)

कल्प - उपसंहृतिषु - ஊழியின் முடிவிலுள்ள காரியங்களில், **कल्पित-ताण्डवस्य** - செய்யப்பெற்ற தாண்டவத்தையுடைய, **खण्ड परशोः** - பரசு என்னும் ஆயுதத்தைத் தாங்கியவனும், **पर-भैरवस्य**-சிறந்த பைரவ வடிவம் கொண்டவனுமான, **देवस्य** - பரமசிவனுடைய, **साक्षिणी** - தாண்டவத்தைக்காண ஸாக்ஷியாக, இருப்பவளும், **पाश अङ्कुश-ऐक्षव-शरासन-पुष्प-बाणाः** - பாசம், அங்குசம், கரும்பாலாகிய வில், மலர்களாலான பாணம் என்ற இந்த ஆயுதங்களைத் தரித்துக் கொண்டிருக்கின்றவளுமான, **सा** - அச்சிறப்பு வாய்ந்த, **तव** -

உன்னுடைய, **मूर्तिः-एका-एव** - சரீர வடிவாயமைந்த அந்த ஒன்றே. **विजयते** - சிறப்புடன் விளங்குகின்ற தன்றே !

அன்னாய்! ஊழிக்காலத்தில் பரசு என்ற ஆயுதம் தாங்கி ஆனந்த தாண்டவம் செய்யும் கால பைரவ வடிவாம் ஸம்ஹார மூர்த்தியான அப்பரமசிவனுக்கு, பாசம், அங்குசம், கரும்பாலாகிய வில், மலர்களாலாகிய பாணம் இவைகளைத் திருக்கரங்களிலே தாங்கிய உனது சிறப்புற்ற அத்திருவுருவு ஒன்றேயன்றே ஸாக்ஷியாக நிற்கும் பெருமை பெற்று சிறப்புடன் விளங்குகின்றது.

இச்செய்யுளில், தாண்டவம் என்ற சொல் உபயோகம் செய்துள்ளது. அதாவது புருஷனால் செய்யப்பெறும் அபிநயம் தாண்டவம் எனச் சொல்லப் பெறும். (13)

लग्नं सदा भवतु मातरिदं तवार्घं
तेजः परं बहुलकुङ्कुमपङ्कशोणम् ।
भास्वत्कीरीटममृतांशुकरावतंसं
मध्येत्रिकोणनिलयं परमामृतार्द्रम् ॥ १४ ॥

லக்நம் ஸதா பவது மாதரிதம் தவார்தம்
தேஜஃ பரம் பஹுலகுங்கும பங்கசோணம்.
பாஸ்வத் கிரீடமம்ருதாம்சுகராவதம்ஸம்
மத்யே த்ரிகோண நிலயம் பரமாம்ருதார்த்ரம்

बहुल-कुङ्कुम - पङ्क - शोणम् - ஏற்ற முள்ளதாகக் குழைத்து வைத்திருக்கின்ற குங்குமக் குழம்பு போல சென்னிறத்தோடு துலங்குவதும், **भास्वत्-किरीटम्** - ஒளியுடன் திகழுகின்ற மகுடமும், **अमृत - अंशु - कला-**

अवतंसम् - அமுதம் நிறைந்த கிரணங்களோடு கூடிய கலையைச் சூடியதும், **परम-अमृत - आर्द्रम्** - பரமானந்த மென்னும் அமுதத்தால் நனைந்ததும், **मध्ये त्रिकोण निलयम्** - முக்கோணத்தை நடுவே கொண்ட பிந்து ஸ்தானத்தை இருப்பிடமாகக் கொண்டதுமான, **तव** - உன்னுடைய, **इदम्** - இந்த, **अर्धम्** - பகுதி வடிவாயமைந்த, **परम्** - சிறந்த, **तेजः** - ஒளியானது, **सदा** - எப்பொழுதும், (**मे** - என்னுடைய, **हृदि** - மனதில்) **लग्नम्** - நன்கு பதிந்துள்ளதாக, **भवतु** - இருக்கட்டும்.

அன்னாய்! காந்தி மிக்கதும், குங்குமக் குழம்பால் சென்னிறம் கொண்டு துலங்குவதுமான கிரீடத்தோடு கூடியதும், பாதிமதியைப் பிறையாகச் சூடிய அழகிய திருமுடியும், அமுதப் பெருக்கால் நனைந்துள்ளதும், முக்கோணத்தின் நடுவே விளங்கும் பிந்துவிலுள்ளதுமான உனது கலையின் பகுதியாயமைந்த தலைசிறந்த ஒளியானது, உனது தொழும்பனாகிய அடியேனுடைய மனதைப் பற்றியவாறு என்றும் நிலைத்திருக்க அருள்வாயாக.

கலையின் பகுதி என்பது ஒரு கலையின் பாதியாகும். இதற்கு **அர்தகலை** என வழக்குமுண்டு. இந்த அர்தகலையானது, சரீர வடிவாயமைந்த ஸ்ரீசக்ரத்தினுடைய பிந்துவின் இருப்பிடமான ஸஹஸ்ரதள பத்மத்திலுள்ள ஜீவகலையினுடைய அதிஷ்டான (நிலைத்த இருப்பிடம்) மாக விளங்கும் பரசித் கலையேயாகும். இதனை **ஸம்வித் கலை** எனவும், ஸாதா என்ற பெயருள்ள **கலை** எனவும் அழைப்பர். இதையே தேவியினுடைய மிகவும் நுண்ணிய வடிவமெனவும் சொல்லப் பெறும். (14)

Scanned by CamScanner

ह्रींकारमेव तव नाम तदेव रूपं
त्वन्नाम दुर्लभमिह त्रिपुरे गृणन्ति ।
त्वत्तेजसा परिणतं वियदादिभूतं
सौख्यं तनोति सरसीरुहसंभवाद्यैः ॥ १५ ॥

ஹ்ரீங்காரமேவ தவ நாம ததேவ ரூபம்
த்வன்நாம துர்லபமிஹ த்ரிபுரே க்ருணந்தி
த்வத்தேஜஸா பரிணதம் வியதாதிபூதம்
ஸௌக்யம் தநோதி ஸரஸீருஹ ஸம்பவாத்யை:

हे त्रिपुरे - ஓ த்ரிபுரே! **तव** - உன்னுடைய, **नाम** - பெயரானது, **ह्रींकारम् - एव** - ஹ்ரீங்கார மேயாகும், **तत्-एव** - அந்த ஹ்ரீங்காரமே, **रूपम्** - வடிவமுமாகும், **इह** - இவ்வுலகில், **दुर्लभम्** - கிடைக்கத்தகாததான, **त्वत्** - உன்னுடைய, **नाम** - பெயரை, **गृणन्ति** - துதிக் கின்றனர், **त्वत् तेजसा** - உன்னுடைய ஒளியினல், **परिणतम्** - தோன்றியதான, **वियद्-आदि भूतम्** - ஆகா யம், முதலிய ஐம்பெரும் பூதங்களும், **सरसीरुह संभव-आद्यैः** - தாமரை மலரில் தோன்றிய நான் முகன் முதலியவர்களோடு, **सौख्यम्** - ஸௌக்யத்தை, **तनोति**- செய்கிறாய்.

அன்னாய்! உன்னுடைய திருநாமம் ஹ்ரீங்கா ரமேயாகும். அந்த ஹ்ரீங்காரமே உனது பீஜாக்ஷர முமாகும், இச்சிறப்பு வாய்ந்த ஹ்ரீங்காரமானது நற்கர்மங்களைச் செய்யாதவர்களுக்குக் கிடைப்பதும் அரிதே யாகும், நற்கர்மங்களை நாடிய சான்றோர் களேவெனில் உனது பீஜாக்ஷரமாம் இந்த ஹ்ரீங்

Scanned by CamScanner

காரத்தை மிகவும் எளிய முறையிலே சிந்தனை செய்த வண்ணமிருக்கின்றனர்.

மற்றும் ஹ்ரீங்கார வடிவாயமைந்த உனது திரு மேனியின் ஒளியிலுல் தோன்றிய ஆகாசம் முதலிய ஐம்பெரும் பூதங்களை முதலில் படைத்து, உனது அருளால் உலகத் தோற்றம் முதலிய காரியங்களைச் செய்வதற்குத் தலைவர்களாக நியமித்த நான்முகன் முதலிய மும்மூர்த்திகளோடு கூடிய இவ்வுலகத்திற்கு ஸுகத்தையும் உண்டுபண்ணுகின்றாய் அன்றே!

மற்றும் இச்செய்யுளில், "ஹ்ரீங்காரமந்ரத் ஹ்ரீங்காரா" என்ற த்ரிசதியில் சொல்லியுள்ள ஹ்ரீங்கார பீஜத்தில் ஐம்பெரும் பூதங்கள் அடங்கி யுள்ளனவென்பதை மந்த்ரசாஸ்த்ரங்களில் பரக்கக் காணலாம். இந்த பீஜத்தின் விரிவான பொருள் விளக்கங்களை எமது த்ரிபுரஸுந்தரீ மந்த்தோத்தர விளக்கம் என்னும் நூலில் காணலாம்.

மற்றும், "**ह्रींकार परसौख्यदा**" ஹ்ரீங்காரபரஸௌ க்யதா என்பது ஸ்ரீலலிதாத்ரிசதி. அவ்விடத்தில் ஸ்ரீசங்கரர் பின்வருமாறு உரை வகுத்துள்ளதையும் இங்கு ஒப்பு நோக்கலாம். அதாவது—ஹ்ரீங்காரபரா: ஹ்ரீங்காரத்தை இலக்காகக் கொண்டு மந்த்ரஜபம் செய்பவர்கள் எனவும் அல்லது ஹ்ரீங்காரத்தால் இணைக்கப்பெற்ற ஸ்ரீவித்தையை ஜபம் செய்கின்ற வர் எனவும் சொல்லுவர், அல்லது அதை ஜபம் செய் கின்ற தொண்டர்களுக்கு, நால்வகையான புருஷார்த்

தங்களையடைவதால் உண்டான சிறந்த ஆனந்த
வடிவான ஸுகத்தைக் கொடுப்பவள் எனவும்,
அல்லது ஹ்ரீங்காரம் வ்யஷ்டியாகும். அதாவது
தனித்து நிற்பது; அதனுடைய வாச்யப் பொருளா
யமைந்த (விரிவு) மும்மூர்த்திகளுக்கும் சிறந்த
ஸௌக்யத்தைக் கொடுப்பவள். அதாவது ஸாம்
ராஜ்ய வடிவாயமைந்த ஸுகத்தை தாதாத்மய
ஸௌக்யத்தைக் கொடுப்பவள் எனவுமாகும். (15)

ह्रींकारत्रयसंपुटेन महता मन्त्रेण संदीपितं
स्तोत्रं यः प्रतिवासरं तव पुरो मातर्जपे मन्त्रवित्।
तस्य क्षोणिभुजो भवन्ति वरागा लक्ष्मीश्चिरस्थायिनी
वाणी निर्मलसूक्तिभारभरिता जागर्ति दीर्घं वयः ॥१६॥

इति श्रीशंकरभगवत्पादकृता श्रीमातृका क्रमस्तुतिः संपूर्णा.

ஹ்ரீங்கார த்ரயஸம்புடேந மஹதா
மந்த்ரேண ஸந்தீபிதம்
ஸ்தோத்ரம் யः ப்ரதிவாஸரம்
தவ புரோமாதர் ஜபே மந்த்ரவித்
தஸ்ய க்ஷோணிபுஜோ பவந்தி வசகா
லக்ஷ்மீஶ் சிரஸ்தாயிநீ
வாணீ நிர்மலஸூக்திபாரபரிதா
ஜாகர்த்தி தீர்க்கம் வயः (16)

இதி ஸ்ரீ சங்கரபகத்பாதக்ருதா ஸ்ரீமாத்ருகா க்ரமஸ்துதிः
ஸம்பூர்ணா

ह्रींकार-त्रय - संपुटेन - முதல், நடுவு, கடை இந்த
மூன்று இடத்திலும் மூன்று ஹ்ரீங்காரங்களால்

Scanned by CamScanner

ஒன்றாக இணைக்கப்பெற்ற, **महता**-தலைசிறந்த, **मन्त्रेण**-மந்த்ரத்தினால், **संदीपितम्** - நன்கு ஒளிரச் செய்த, **स्तोत्रम्** - துதியை, **यः** - எந்த, **मन्त्रवित्**-மந்த்ரமுணர்ந்தவன், **प्रतिवासरम्** - தினந்தோறும், **हे मातः** - ஓ அன்னையே! **तव** - உன்னுடைய, **पुरः**-முன்னிலையில், **जपेत्** - ஜபம் செய்கின்றானே! **तस्य** - அந்த பக்தனுக்கு, **क्षोणिभुजः** - அரசர்களும், **वशगाः** - வசமுள்ளவர்களாக, **भवन्ति** - ஆகின்றனர். **लक्ष्मीः** - லக்ஷ்மீ தேவியும், **चिरस्थायिनी** - நிலைத்திருக்கும் தன்மையும், **वाणी** - ஸரஸ்வதீ தேவீ, **निर्मल-सूक्ति-भार-भरिता** - தூய்மையான அழகாயும், பொருளும் (சப்தம் அர்த்தம்) நிறைந்த தன்மையையும், **सः** - அத்தொழும்பன், **दीर्घम्** - நீண்டதான, **वयः** - ஆயுளையும், **जागर्ति**-ஜீவித்திருக்கும் தன்மையும் அடைகின்றான்.

அன்னாய்! மூன்று ஹ்ரீங்காரத்தோடு கூடிய ஸ்ரீவித்யா மஹாமந்த்ரங்களைக் கொண்டு விளங்கும் இந்த ஸ்தவத்தை பக்தி வயப்பட்ட தொண்டனொருவன் தினந்தோறும் தவறாது ஜபம் செய்து வருகின்றானே அந்த பக்தனுக்கு அரசர்களும் அடிமையாகின்றனர். திருமகளின் திருநோக்கால் ஸம்பத்துக்கள் பெருகுகின்றன. வாணியின் வரப்ரஸாதத்தால் வாக்கின் வன்மையும் உண்டாகின்றன. அன்னாய்! உனது திருவருளால் அவனுடைய நீண்ட ஆயுளும் கிடைக்கின்றதன்றே! பின்னே? அத்தொழும்பன் வேண்டும் விழைவுதான் என்ன ஒன்றுமில்லை

யன்மே! அன்னையின் திருநோக்கையடைந்த அவ
னுக்கு இவ்வுலகில் வேண்டுவது ஒன்றுமில்லை (16)
என்பது ஸாரம்.

இவ்வாறு ஸ்ரீ சங்கர பகவத் பாதர் திருவாய் மலர்ந்தருளிய
ஸ்ரீமாத்ருகா க்ரமஸ்துதியின் உரை இவண் முற்றும்.

——